


Metro லீடர்
மெட்ரோ LEADER
தமிழ் பேசும் மக்கள் 'நமக்கான நாளிதழ்'

CN ceynews
www.ceynews.lk

லீடர்: 03 | இதழ் -265 | 20.02.2023 | பக்கங்கள்: 05 | editorml21@gmail.com | விலை: 50/-

# போதிய நிதி இல்லாததால், திட்டமிட்டபடி தேர்தலை நடத்த முடியாது

## -தேர்தல்கள் ஆணைக்குழு உயர் நீதிமன்றத்திற்கு அறிவிப்பு-





போதிய நிதி மற்றும் இதர வசதிகள் இல்லாததால், வாக்குறுதி அளித்தபடி உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தும் நடவடிக்கைகள் தடைபட்டுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு உயர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

அதன்படி, உள்ளூராட்சி தேர்தலை திட்டமிட்டபடி நடத்த நடவடிக்கை எடுப்பதாக உயர் நீதிமன்றத்தில் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றுவதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தல் ஆணைக்குழு சார்பில் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு மூலம் இந்த உண்மைகள் வெளியாகியுள்ளன.

# 224 எம்.பிக்களின் ஆயுள் ரணில் கையில்



இன்று (20) நள்ளிரவுக்குப் பிறகு, எந்த நேரத்திலும் பாராளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதி கிடைக்கப்பெறவுள்ளது. அரசியலமைப்பின் 70 (1) உட்பிரிவின் பிரகாரம் ஜனாதிபதிக்கு பாராளுமன்றத்தை 02 ⏭

# ஜனாதிபதிக்கு தேர்தலை சந்திக்க பயம்!



## தேர்தலை நடத்த வைப்போம் - சுமந்திரன் எம்.பி

தேர்தல் நடக்குமா, இல்லையா என்ற கேள்விக்கு மத்தியில் நாங்கள் பரப்புரை செய்கின்றோம். தேர்தல் நடக்க வேண்டும். நடத்த வைப்போம். நாங்கள் தேர்தல் நடக்க வேண்டும் என்று மக்கள் மத்தியில் சொல்கின்றோம். தேர்தல் நடக்காமல் பிற்போடப்பட்டால் 02 ⏭

# ராஜபக்ஷர்கள் கௌரவமாக அரசியலில் இருந்து விலக வேண்டும்: சந்திரிக்கா



எவ்வித வரையறையும் இல்லாமல் அரச நிதியை ராஜபக்ஷ குடும்பம் கொள்ளையடித்தமையே நாடு வங்குரோத்து நிலைக்குச் செல்லக் காரணம் என முன்னாள் 02 ⏭

# துருக்கி - சிரியா நிலநடுக்கம் : மீட்பு பணிகள் நிறைவு

துருக்கியில் கடந்த 6 ஆம் திகதி அதிகாலை சிரியா நாட்டின் எல்லையோரம் அமைந்துள்ள காசியான்டெப் நகரை மையமாக கொண்டு அதிபயங்கர நிலநடுக்கம் தாக்கியது. 02 ⏭

# விட்டுக் கொடுத்து விலகிய ஹக்கீம்



முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமையிலான 02 ⏭

## 224 எம்.பிக்களின் ஆயுள்...

கலைக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

எனினும், அரசியலமைப்பின் 70 (1) (அ) உறுப்புரையின் பிரகாரம், தற்போதைய பாராளுமன்றம் முதல் முறையாக கூடுவதற்கு நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து இரண்டு ஆண்டுகள் 6 மாதங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதியில், பாராளுமன்றத் தீர்மானம் மூலம் கோராதபட்சத்தில் ஜனாதிபதியினால் பாராளுமன்றத்தை கலைக்க முடியாது.

## ஜனாதிபதிக்கு தேர்தலை சந்திக்க...

அந்தக் குள்ள நரித்தனத்தையும் வெளிக்கொண்டு வருவோம்.”

இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பின ருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முல்லைத்தீவு மாவட்டம், புதுக்குடியிருப்பு பிரதே சபைக்கான வேட்பாளர் அறிமுகக் கூட்டம் புதுக்குடியிருப்பு நகர் பகுதியில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே சுமந்திரன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

மக்கள் தேர்தல் நடக்குமா என்று கேட்கின்றார்கள். ஜனாதிபதிக்கு தேர்தலைச் சந்திக்கப் பயம். இதன் காரணத்தால் தேர்தலை பிற்போடப் பார்க்கின்றார்கள்.

மாகாண சபைத் தேர்தலையும் பெரும் சூழ்சியால் காலவரையறையின்றிப் பிற்போட்டுவிட்டார்கள். 2019 ஆம் ஆண்டு மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்காக தனிநபர் சட்டவரைவை நாடாளுமன்றத்தில் நான் சமர்ப்பித்தேன்.

இப்போது அவர்கள் என்ன செய்கின்றார்கள்? மாகாண அதிகாரமும் கிடையாது. உள்ளூராட்சி அதிகாரங்களையும் பாவிக்கவிடாமல் பறித்து எடுத்துவிட்டார்கள்.

மக்கள் ஆணை இல்லாமல் குறுக்கு வழியில் ஜனாதிபதியாக வந்த ஒருவர் முழு அதிகாரத்தையும் தன் கைக்குள் கொண்டுவரும் சூழ்ச்சிதான் தேர்தலைப் பிற்போட எடுக்கப்படும் நடவடிக்கை. இதற்கு எதிராக நாங்கள் திரண்டெழ வேண்டும்.

இந்தத் தேர்தலின் முக்கியத்துவத்தை உணர்ந்த காரணத்தால்தான் தேர்தலைப் பிற்போட முனைகின்றார்கள். தேர்தல் வந்தால் ஆட்சியில் இருப்பவர்களை மக்கள் தூக்கி கடாசி விட்டார்கள் என்பது தெட்டத்தெளிவாகத் தெரியவரும் – என்றார்.

## ராஜபக்ஷர்கள் கௌரவமாக அரசியல்...

ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

பொருளாதார பாதிப்பு என குறிப்பிட்டுக் கொண்டு அரச தலைவர்கள் சர்வதேசத்திடம் யாசகம் பெறுவதாக குற்றம் சாட்டியுள்ள முன்னாள் ஜனாதிபதி, தற்போதைய அவலநிலை கண்டு மனவேதனை அடைவதாகவும் தெரிவித்துள்ளார்.

முழு உலகத்திற்கும் சிறந்த எடுத்துக்காட்டாக இருந்த இலங்கை, இன்று ராஜபக்ஷ குடும்பத்தின் ஊழல் மோசடியினால் வங்குரோத்து நிலையை அடைந்துள்ளது என முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

ராஜபக்ஷ குடும்பம் மக்களாணை என குறிப்பிட்டுக் கொண்டு நாட்டு மக்களை தவறாக வழி நடத்தி ஆட்சியை கைப்பற்றி முழு நாட்டையும் சூறையாடியது என சந்திரிக்கா குமாரதுங்க குற்றம் சாட்டியுள்ளார்.

மீண்டும் ராஜபக்ஷர்கள் தலைமையிலான ஆட்சியை உருவாக்குவதாக குறிப்பிட்டுக் கொண்டு ஒரு தரப்பினர் அரசியல் செய்தாலும் ராஜபக்ஷர்கள் கௌரவமாக அரசியலில் இருந்து விலக வேண்டும் என சந்திரிக்கா குமாரதுங்க தெரிவித்துள்ளார்

## துருக்கி – சிரியா நிலநடுக்கம்...

ரிக்டர் அளவில் 7.8 புள்ளிகளாக பதிவான இந்த நிலநடுக்கம் ஒட்டுமொத்த துருக்கியையும் உலுக்கியது. துருக்கியின் 10 மாகாணங்களை நிலநடுக்கம் உருக்குலைத்து விட்டது. வானளவுக்கு கம்பீரமாக உயர்ந்து நின்ற ஆயிரக்கணக்கான கட்டிடங்கள் நொடிப்பொழுதில் கட்டிட குவியல்களாக மாறிப்போயின.

இதனிடையே, துருக்கியில் இதுவரை நிலநடுக்கத்துக்கு உயிரிழந்தோரின் எண்ணிக்கை 40,642 ஆக அதிகரித்துள்ளதாக அந்த நாட்டின் தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் தெரிவித்துள்ளது.

அதேபோல் சிரியாவில் பலி எண்ணிக்கை 5,800 ஐ கடந்துள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. இந்த நிலையில் நிலநடுக்கத்துக்கு பிறகு கிட்டத்தட்ட 2 வார காலமாக தீவிர மீட்பு பணிகள் நடந்து வந்த துருக்கியில் நேற்று மாலையுடன் மீட்பு பணிகள் நிறைவடைந்தன.

இது குறித்து துருக்கி பேரிடர் மற்றும் அவசரநிலை மேலாண்மை ஆணையத்தின் தலைவர் யூனுஸ் சேசர், கூறுகையில், நிலநடுக்கத்தால் ஏற்பட்ட இடிபாடுகளுக்கு அடியில் சிக்கியவர்களைத் தேடும் மற்றும் மீட்கும் பணி பெரும்பாலான மாகாணங்களில் முடிவடைந்துள்ளது.

நாளை இரவுக்குள் தேடுதல் மற்றும் மீட்புப் பணிகளை முழுவதுமாக முடித்துவிடுவோம் என நம்புகிறோம். நிலநடுக்கம் ஏற்பட்ட பகுதிகளில் இருந்து மொத்தம் 430,000 மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர் என கூறினார்.

# அம்பாறை மாவட்டத்தில் பல இடங்களில் வெள்ள அனர்த்த நிலை!



அம்பாறை மாவட்டத்தின் பல இடங்களில் பலத்த மழை பெய்து வருதன் காரணமாக மாவட்டத்தில் பல இடங்களில் வெள்ள அனர்த்த நிலை உருவாகியுள்ளது.

அத்துடன், ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பல பிரிவுகள் வெள்ளத்தில் மூழ்கிய நிலையில் சில குடியிருப்புக்களிலும் வெள்ளம் புகுந்துள்ளது.

அரச மற்றும் அரச சார்பற்ற திணைக்களங்கள் பாடசாலைகள் சிலவற்றிலும் வெள்ளம் புகுந்துள்ள நிலையில் அலுவலகங்களின் அன்றாட செயற்பாடுகளும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன.

சில பகுதிகளில் முற்றாக வெள்ளம் சூழ்ந்துள்ளதனால் வீதி அருகில் உள்ள வடிகான்களை அவதானிக்க முடியாத நிலையில் மக்கள் விபத்தினை எதிர்கொள்ளும் நிலையும் உருவாகியுள்ளது.

இதேநேரம் அறுவடைக்கு தயாராகிவிருந்த வயல் நிலங்களும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் அறுவடை மேற்கொள்ள முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ள விவசாயிகள் பெரும் கவலை அடைந்துள்ளனர்.

சாகாம வீதியில் உள்ள நீத்தை நீர் வடிந்தோடும் பகுதியில் வாகனங்கள் செல்ல முடியாதவாறு நீர் வடிந்தோடுவதை காண முடிகின்றது.

ஆலையடிவேம்பு பிரதேசத்தின் பிரதான நீர் வெளியேற்றப்படும் சின்னமுகத்துவாரம் கழிமுகப் பிரதேசம் உடைப்பெடுத்து நீர் வெளியேறுவதனால் வெள்ளம் அனர்த்தம் சற்று குறைவடையும் என கூறப்படுகின்றது.

## விட்டுக் கொடுத்து விலகிய...

ஐக்கிய தேசிய கூட்டமைப்பில் இலங்கை தமிழரசு கட்சி போட்டியிட எடுக்கப்பட்டுள்ள தற்காலிக ஒன்றிணைவுத் தீர்மானம், நல்ல எதிர்காலத்தை உருவாக்கும் என முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

முஸ்லிம் – தமிழ் இனங்கள் தொடர்பாக தமிழரசுக் கட்சியின் கொள்கை வலுப்பெறும் என நேற்று (19) இடம்பெற்ற கலந்துரையாடலின் போது அவர் குறிப்பிட்டார்.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்று பிரதேச சபையில் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் வேட்ப்பு மனு நிராகரிக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து குறித்த விடயம் தொடர்பில் நீதிமன்றை நாடியும் குறித்த வேட்பு மனு நிராகரிக்கப்பட்ட நிலையில் இதற்கான மாற்று வியூகம் ஒன்றை இலங்கை தமிழ் அரசுக் கட்சி அமைத்து அது தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச சபை மண்டபத்தில் நேற்று (19) இடம்பெற்றது.

இதன்படி, ஐக்கிய தேசியக் கூட்டமைப்பு எனும் கட்சியில் தராசு சின்னத்தில் போட்டியிட இலங்கை தமிழ் அரசுக் கட்சி முன்வந்துள்ளது.

இந்நிலையில் குறித்த ஐக்கிய தேசியக் கூட்டமைப்பு எனும் கட்சியின் உறுப்பினர்கள் இராஜினாமா செய்து இந்தச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் முல்லைத்தீவு மாவட்ட செயலாளர், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

ஐக்கிய தேசியக் கூட்டமைப்பு மற்றும் இலங்கை தமிழ் அரசுக் கட்சி ஆகியவற்றின் இணக்கப்பாட்டுடன் இந்த முடிவு எட்டப்பட்டு கரைதுறைப்பற்று பிரதேச சபையில் தராசு சின்னத்தில் இலங்கை தமிழ் அரசுக் கட்சி வேட்பாளர்கள் களமிறங்குவதாக முடிவு எட்டப்பட்டுள்ளது.

குறித்த கட்சியில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக கொண்ட ஹிஜ்ராபுர வேட்பாளர் தவிர ஏனையவர்கள் அந்தக் கட்சியில் இருந்து விலகி தமிழரசு கட்சியில் போட்டியிட்ட வேட்பாளர்களுக்கு அந்த சந்தர்ப்பத்தை வழங்கியதன் அடிப்படையில் ஐக்கிய தேசிய கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடுகின்ற நீராவிப்பட்டி வேட்பாளர் உடைய ஏற்பாட்டில் நீராவிப்பிட்டி பகுதியிலே தேர்தல் பரப்புரை கூட்டம் ஒன்றும், கட்சிகளுக்கிடையிலான ஒப்பந்தம் தொடர்பான விளக்கக் கூட்டமும் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் இலங்கை தமிழரசு கட்சியினுடைய தலைவர் மாவை சேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம், முல்லைத்தீவு மாவட்ட இலங்கை தமிழரசு கட்சியினுடைய செயலாளரும் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினருமான துரைராசா ரவிகரன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உயர்பீட உறுப்பினர் நஜீத் மற்றும் கரைத்துறைபற்று பிரதேச சபை தேர்தலிலே இலங்கை தமிழரசு கட்சி சார்பிலே போட்டியிடுவதற்காக தெரிவு செய்யப்பட்ட வேட்பாளர்கள் மற்றும் கிராம மக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.




# படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி கோரி மட்டக்களப்பில் போராட்டம்

**எம்.பஹுத் ஜுனைட்**

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி வழங்குங்கள் என்ற தொனிப்பொருளிலான போராட்டமொன்று சனிக்கிழமை (18) மட்டக்களப்பு காந்தி பூங்காவில் நடைபெற்றது.





கிழக்கு மாகாண ஊடகவியலாளர் ஒன்றியம், யாழ் ஊடக அமையம், தொழில்சார் இணைய ஊடகவியலாளர் சங்கம் மற்றும் தெற்கு ஊடக அமைப்புகள் இணைந்து ஏற்பாடு செய்திருந்த இப்போராட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன் (ஜனா), மட்டக்களப்பு மாநகர முதல்வர் தியாகராஜ சரவணபவன் மற்றும் ஊடகவியலாளர்கள், சமூக ஆர்வலர்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இப்போராட்டத்தின் போது படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி வழங்கக்கோரி ஜனாதிபதிக்கான மகஜரினை மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன் (ஜனா) அவர்களிடம் வழங்கி வைக்கப்பட்டது.



சாய்ந்தமருது பிரதேச செயலக பிரிவுக்கான புதிய பிறப்பு, இறப்பு பதிவாளராக மௌலவி ஏ.அஷ்ரப் (08) திகதி முதல் செயற்படும் வண்ணம் பதிவாளர் நாயக திணைக்களத்தினால் நியமனம் பெற்று பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக்கினால் நியமனக் கடிதம் வழங்கப்பட்டது. இதன் போது பிரதேச செயலக மேலதிக மாவட்ட பதிவாளர் ஐ.எம்.பாயிஸ் கலந்து கொண்டார்.

**படம் – நூருல் ஹுதா உமர்**

# பாடசாலை மாணவர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கிவைப்பு



**எம்.என்.எம்.அப்ராஸ்**

யுனிசெப் நிறுவனம் அம்பாறை மாவட்டம் காரைதீவு பிரதேச செயலகத்திற்குற்பட்ட மாவடிப்பள்ளி கிழக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் கொவிட் தாக்கத்தினாலும், பொருளாதார நெருக்கடியாலும் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவ, மாணவிகளை அடையாளம் கண்டு அவர்களை மேம்படுத்துவதற்கான வேலைத்திட்டத்தை யுனிசெப் மற்றும் PPCC எனும் நிறுவனம் முன்னெடுத்து வருகின்றது. இதன் முதற்கட்டமாக ரூபா 40 ஆயிரம் பெறுமதியான உலர் உணவு பொதியும், இரண்டாம் கட்டமாக சிறுவர்களுடைய உள நலனை மேம்படுத்துவதற்காக விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு யுனிசெப் நிறுவனத்தின் மாவடிப்பள்ளி தொண்டரான இசட். எம்.நஸ்ஹான் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது காரைதீவு பிரதேச செயலக சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர் டி.ஜாசுகி, இளைஞர் சேவை மன்ற அதிகாரி எம்.ஐ.எம்.பரீட் ஆகியோர் கலந்து கொண்டு சிறுவர் பாதுகாப்பு, கல்வி , உரிமைகள், சிறுவர்கள் இணைந்து செயற்படுவதன் முக்கியத்துவம் பற்றி உரையாற்றினார்கள்.

# அரச ஊழியர்களுக்கான சிங்கள மொழி பாட நிறைவு நாள் நிகழ்வு




**ஹஸ்பர்**

திருகோணமலை தம்பலகாமம் பிரதேச செயலகத்தில் தமிழ் பேசும் அரச உத்தியோகத்தர்களுக்கான சிங்கள மொழி பாடநெறியின் இறுதி நிறைவு நாள் நிகழ்வு பிரதேச செயலகத்தில் (15) இடம் பெற்றது.

பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி தலைமையில் இடம் பெற்ற சிங்கள மொழி பாடநெறியானது 150 மணித்தியாலயங்களை கொண்ட குறித்த பாடநெறியானது தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் ஏற்பாட்டில் இடம் பெற்றது.

இதில் சிங்கள பாரம்பரிய கலை கலாசார நிகழ்வுகளை தமிழ் பேசும் உத்தியோகத்தர்கள் மேடை ஏற்றி அலகரித்தனர். மொழி போதனாசிரியர்களுக்கான பரிசில்களையும் இதன் போது பிரதேச செயலாளர் வழங்கி வைத்தார்.

இதில் 62 அரச ஊழியர்கள் இப் பாடநெறியை நிறைவு செய்தனர். குறித்த நிகழ்வில் நிருவாக உத்தியோகத்தர் உடகெதர,சிங்கள மொழி போதனாசிரியர்கள்,மாவட்ட செயலக மொழி இணைப்பாளர் உட்பட பலர் கலந்து கொண்டனர்




திருகோணமலை அன்பின் பாதை சமூகத்தின் ஒருங்கிணைப்பின் கீழ் “விளிம்பு நிலை மக்களின் வாழ்வை ஒளியேற்ற தம் வாழ்நாளினை அர்ப்பணிக்கும் பெருமக்களை கொண்டாடி மகிழல்” என்ற தொனிப்பொருளில் அறம் செய்வோம் அறக்கட்டளையின் முதலாவது அகல் விருது - 2023 வழங்கள் விழா (18) திருகோணமலை நகரசபை நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

**படம்: அபு அலா**

# சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரியாக டாக்டர் எம்.ஜே.கே.எம். அர்சத் காரியப்பர் கடமையேற்பு

நூருல் ஹுதா உமர்



சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரியாக சாய்ந்தமருதை சேர்ந்த டாக்டர் எம்.ஜே.கே.எம். அர்சத் காரியப்பர் (16) தனது கடமைகளை உத்தியோகபூர்வமாக ஏற்றுக் கொண்டார்.

இந்நிகழ்வில் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரியாக கடமையாற்றிய டாக்டர் யூ.எல்.எம். நியாஸ் உள்ளிட்ட பொது சுகாதார உத்தியோகத்தர்கள், காரியாலய உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

கடந்த காலங்களில் கல்முனை மாநகர சுகாதார வைத்திய அதிகாரியாக கடமையாற்றிய டாக்டர் எம்.ஜே.கே.எம். அர்சத் காரியப்பர் மாநகர சுகாதாரப் பிரிவினூடாக பல்வேறு சுகாதார வேலைத்திட்டங்களை முன்னெடுத்திருந்ததுடன், பாவனைக்கு உதவாத வகையில் ஒதுக்கப்பட்ட இயந்திரங்களை மீள் பழுது பார்ப்பினூடாக மக்களுக்கு உதவும் வகையில் மாற்றியமைத்து மக்கள் பாவனைக்கு கையளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

முன்னாள் அமைச்சர் கேட் முதலியார் எம்.எஸ். காரியப்பரின் பேரனான இவர் வைத்திய மற்றும் சுகாதார சேவைக்கு அப்பால் பிரதேசத்தின் சமூக நல செயற்பாடுகளில் டார்க் பௌண்டேஷன் எனும் அமைப்பை தோற்றுவித்து பல்வேறு சமூக சேவைகளை செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

# திருகோணமலை மாவட்டத்தில் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் அறிமுகம்



ஹஸ்பர்

தேசிய சமாதான பேரவையின் அனுசரணையுடன் சேர்விங் ஹியூமானிட்டி பவுன்டேசன் கிண்ணியா அமைப்பினரின் ஒருங்கிணைப்பில் இம்முறை திருகோணமலை மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கான அறிமுகக் கருத்தரங்கு திருகோணமலை ஜுபிலி மண்டபத்தில் (15) நடைபெற்றது.

தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு கட்சியில் இருந்தும் தலா 03 வேட்பாளர்களும் மற்றும் திருகோணமலை மாவட்டத்தில் அமைந்துள்ள பிரதேச சர்வமதக் குழுமத்தின் உறுப்பினர்கள் அனைவரும் கலந்து சிறப்பித்தனர். நீடித்து நிலைத்திருக்கக்கூடிய சமாதானம், இன ஐக்கியம், சகவாழ்வு மற்றும் பன்மைத்துவம் போன்றவற்றைக் கட்டியெழுப்புவதற்கான பல்வேறு செயற்திட்டங்களையும், பயிற்சிகளையும் தேசிய சமாதான பேரவை பிரதேச மட்டங்களில் மேற்கொண்டு வருகிறது.

அவ்வாறான செயற்றிட்டங்களில் ஒன்றான மத சகவாழ்வுக்கான முன்னெடுப்பு (ARC) எனும் இச்செயற்திட்டத்தில் சர்வ மத குழுவின் நோக்கு, அதன் இலக்கு, சமூக அங்கீகாரம், உள்ளக ஒற்றுமை, குழுச் செயற்பாடு மற்றும் பெறுபேறு தொடர்பில் விரிவான விளக்கமளிக்கப்பட்டதுடன் பங்கு பற்றுனர்களுக்கிடையிலான குழுச் செயற்பாடுகளும் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் வளவாளராக தேசிய சமாதானப் பேரவையின் சிரேஸ்ட நிகழ்ச்சித் திட்ட உத்தியோகத்தர் எம்.யூ. மதனி உவைஸ், சேர்விங் ஹியூமானிட்டி பவுன்டேசனின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆஷிக் அலாப்தீன் மற்றும் நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், இளைஞர் கழக உறுப்பினர்கள், மதத் தலைவர்கள், பெண்கள் அமைப்பின் உறுப்பினர்கள், சமூகமட்ட செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

# சம்மாந்துறை பிரதேச சபையின் தவிசாளராக மாஹிர் தெரிவு




ஐ.எல்.எம் நாஸிம்



சம்மாந்துறை பிரதேச சபையின் தவிசாளர் இராஜினாமா செய்தமை யினால் பிரதேச சபையின் புதிய தவிசாளர் தெரிவுக்கான விசேட அமர்வு கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் என்.மணிவண்ணன் தலைமையில் சபாமண்டபத்தில் இடம்பெற்றது.

பிரதேச சபையின் புதிய தவிசாளரைத் தெரிவு செய்யும் வகையில் இடம்பெற்ற அமர்வில் பிரதேச சபை உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிரின் பெயர் மாத்திரமே தவிசாளர் பதவிக்காக முன்மொழியப் பட்டன. இதனால் கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் என்.மணிவண்ணன் ஏகமனதாக சம்மாந்துறை பிரதேச சபையின் தவிசாளராக ஐ.எல்.எம்.மாஹி ரின் பெயரை உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.

இதில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் ஆறு உறுப்பினர்களும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இரண்டு உறுப்பினர்களும், ஐக்கிய தேசிய கட்சியின் இரண்டு உறுப்பினர்கள் உள்ளிட்ட பத்து உறுப்பினர்கள் சபைக்கு சமூகமளித்தனர்.

இதில் அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ்.எல்.ஏ.கமல் நெத்மினி, கிழக்கு மாகாணஉள்ளூராட்சி திணைக்களத்தின் புலனாய்வு உத்தியோகத்தர் என்.ஜங்கரன், சம்மாந்துறை பிரதேச சபை செயலாளர் எம்.ஏ.கே.முஹம்மட், உதவித் தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட், பிரதேச சபை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

# போதைக்கு எதிரான பிரகடனத்தில் கைச்சாத்திடும் நிகழ்வு



ஐ.ஏ.ஸிறாஜ்

பாலமுனை போதை தடுப்பு குழுவின் ஏற்பாட்டில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பாலமுனை இரு வட்டாரங்களில் போட்டியிடும் வேட்பாளர்களின் போதைக்கு எதிரான பிரகடனத்தில் கைச்சாத்திடும் நிகழ்வு பாலமுனை மின்ஹாஜ் தேசிய பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. பாலமுனை போதை தடுப்பு குழுவின் இணைப்பாளரும் திருக்கோயில் பிரதேச செயலக உளவள உத்தியோகத்தருமான எஸ்.ஆப்தீன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பள்ளிவாசல் தலைவர்கள், அரசியல் கட்சிகளின் அமைப்பாளர்கள், சமூக மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டனர்.

# மாளிகைக்காடு ஜனாஸா நலன்புரி அமைப்பின் ஜனாஸா வாகனம் அறிமுகம்

நூருல் ஹுதா உமர்

அம்பாறை மாவட்ட மாளிகைக்காடு ஜனாஸா நலன்புரி அமைப்பின் முயற்சியின் பயனாக பிரதேச வர்த்தகர்கள், பொதுமக்கள் வழங்கிய நிதிப்பங்களிப்பில் கொள்வனவு செய்யப்பட்ட ஜனாஸா வாகன அறிமுக நிகழ்வு மாளிகைக்காடு ஜனாஸா நலன்புரி அமைப்பின் தலைவர் ஏ.எல்.எம். இம்தியாஸ் தலைமையில் அந்நூர் கலாச்சார மண்டப முன்றலில் (17) மாலை இடம்பெற்றது.

காரைதீவு பிரதேச செயலாளர் எஸ். ஜெகராஜன் பிரதம அதிதியாக கலந்து கொண்ட இந்நிகழ்வில் சாய்ந்தமருது பிரதேச செயலக நிர்வாக கிராம நிலதாரி ஏ.ஏ. நஸீர், சாய்ந்தமருது – மாளிகைக்காடு உலமா சபை தலைவர் மௌலவி ஏ.எல்.எம். சலீம் , மாளிகைக்காடு அந்நூர் ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் தலைவர் ஏ. பௌசர், மாளிகைக்காடு ஸாலிஹீன் ஜும்ஆ பள்ளிவாசல் தலைவர் எம்.எம். ஜெமீல், மாளிகைக்காடு, சாய்ந்தமருது ஜும்ஆ பள்ளிவாசல்களின் செயலாளர்கள், பிரதேச முக்கிய அமைப்புக்களின் தலைவர்கள், பாடசாலை அதிபர்கள், பொலிஸார், மாளிகைக்காடு கிழக்கு கிராம நிலதாரி ஏ.எம். நஜீம் உட்பட முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர். இதன்போது ஜனாஸா நலன்புரி அமைப்பின் கடந்த கால சேவைகள் நினைவுபடுத்தப்பட்டதுடன், நேரடி அரசியலில் களமிறங்கிய மூன்று உறுப்பினர்கள் அமைப்பிலிருந்து இடைநிறுத்தப்பட்டனர். கடலரிப்பில் முழுமையாக சேதமாகிய மாளிகைக்காடு ஜனாஸா மையவாடிக்கு புதிய இடமொன்றை வழங்க கோரி பொதுமக்களின் சார்பில் பல்வேறு பொது அமைப்புக்கள் கோரிக்கை முன்வைத்து வருவதன் தொடர்ச்சியாக ஜனாஸா மையவாடி தொடர்பில் ஜனாஸா நலன்புரி அமைப்பும் மகஜரொன்றை அதிதிகளிடம் இதன்போது கையளித்தனர். அர்ப்பணிப்புடன் சேவையாற்றிவரும் இந்த ஜனாஸா அமைப்பின் செயற்பாடுகளை இன்னும் இலகு படுத்தும் விதமாக ஜனாஸா வாகனத்தை வழங்க உதவிய எல்லோருக்கும் நன்றிகளை தெரிவித்த அமைப்பினர் இந்த ஜனாஸா வாகனம் 24 மணிநேர சேவையில் ஈடுபட தயார் நிலையில் இருப்பதாகவும் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

sportsml77@gmail.com

SPORTS லீடர்



# சம்மாந்துறை அல்–ஹம்றா வித்தியாலயத்தின் இல்ல விளையாட்டுப் போட்டி: சபா இல்லம் சம்பியன்

**–நூருல் ஹுதா உமர்–**

சம்மாந்துறை அல்–ஹம்றா வித்தியாலயத்தின் வரலாற்றில், 25 வருடங்களின் பின்னர் இல்ல விளையாட்டுப்போட்டி வித்தியாலயத்தின் அதிபர் ஏ. முகம்மது றிஸ்வான் தலைமையில் அண்மையில் மிகக்கோலாகரமாக பாடசாலை முற்றலில் அமைந்திருக்கும் மைதானத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் சபா மற்றும் மர்வா என மாணவர்கள் இரு அணிகளாக பிரிந்து போட்டிகளில் பங்கு கொண்டனர். 25 வருடங்களைத் தாண்டிய போட்டியென்பதால் குறித்த பாடசாலையின் முற்றல் விழாக்கோலம் பூண்டிருந்தது. நிகழ்வுக்கு பிரதம அதிதியாக சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி எஸ்.எம்.எம்.எஸ் உமர் மௌலானா கலந்து கொண்டு நிகழ்வைச் சிறப்பித்து இருந்தார். போட்டியில் புள்ளிகள் அடிப்படையில் 300 புள்ளிகளை பெற்று சபா இல்லம் (பச்சை இல்லம்) வெற்றி வாய்ப்பை தனதாக்கிக் கொண்டது. இதில் மர்வா (மஞ்சள் இல்லம்) 267 புள்ளிகளை பெற்று இரண்டாம் இடத்தையும் தனதாக்கிக் கொண்டது. போட்டியின் இறுதி நாள் நிகழ்வுக்கு சம்மாந்துறை வலய கல்வி அலுவலகத்தின் சார்பில் அதிதிகளாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் வி. நிதர்சினி, பிரதிக் கல்விப் பணிப்பாளரும் சம்மாந்துறை கோட்டக் கல்வி பணிப்பாளருமா ஏ.எல்.ஏ.மஜீட், உதவிக் கல்விப் பணிப்பாளர்





நைறூஸ்கான் ஹிதாயத்துள்ளாஹ், உதவிக் கல்விப் பணிப்பாளர் பி. பரமதயாளன், ஆசிரியர் வாண்மை விருத்தி மத்திய நிலைய முகாமையாளர் எம்.ஐ.அஸீனா மற்றும் பாடசாலை அபிவிருத்திக் குழுவின் செயலாளர் ஏ.எல்.எம்.பைரோஜ் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். இங்கு கருத்துத் தெரிவித்த சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி எஸ்.எம்.எம்.எஸ் உமர் மௌலானா, அல் ஹம்றா வித்தியாலயத்தை கையேற்ற கையோடு அதிபர் ஏ. முகம்மது றிஸ்வான் பாடசாலையின் ஆசிரியர்கள், அபிவிருத்திச் சபையினர் மற்றும் பெற்றோர்களின் பங்களிப்புடன் இவ்வாறானதொரு பிரமாண்டமான நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளமை மகிழ்வைத் தருவதாகவும் இறுதி நிகழ்வில் இல்லங்களுக்கான வடிவமைப்பை மிக நேர்த்தியான முறையில் உருவாக்கியிருந்தமை தனக்கு வியப்பைத் தந்ததாகவும் தெரிவித்தார். மாணவர்கள், புறக்கீர்த்தி செயற்பாடுகள் போன்று அவர்களது ஏனைய கல்வி அபிவிருத்தி விடயங்களிலும் சிரத்தையுடன் செயற்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

இங்கு கருத்துத் தெரிவித்த சம்மாந்துறை வலய பிரதிக் கல்விப் பணிப்பாளரும் சம்மாந்துறை கோட்டக் கல்வி பணிப்பாளருமான ஏ.எல்.ஏ.மஜீட், இவ்வாறான போட்டிகளை நடாத்துவதன் நோக்கம் மாணவர்களுக்கிடையேயோ அல்லது ஆசிரியர் பெற்றோர்களுக் கிடையேயோ பிரிவினையை ஏற்படுத்துவதற்காக அல்லவென்றும் மாணவர்கள் ஆரம்பத்திலிருந்தே வெற்றி தோல்வி போன்ற கட்டங்களை சகித்துக்கொள்ளும் மனோபக்குவ நிலையை அவர்களது மனங்களில் உருவாக்குவதே என்றும் போட்டிகள் முடிவடைந்ததன் பின்னர் மாணவர்கள் தாங்களது வழமையான பணிகளை தொடர வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.



நிகழ்வில் பாடசாலை முற்றல், பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் அயலவர்கள் என விழாக்கோலம் பூண்டு காணப்பட்டது. சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி எஸ்.எம்.எம்.எஸ் உமர் மௌலானா பாடசாலை சமூகத்தினரால் பொன்னாடை போற்றி கௌரவிக்கப்பட்டார். அத்துடன் போட்டிகளின் இறுதியில் மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டதுடன் சம்பியனான இல்லங்களுக்கு கேடயங்களும் வழங்கி வைக்கப்பட்டன.







சாய்ந்தமருது ஸஹிரியன் விளையாட்டு கழகத்தின் இளையோர் அணிக்கும் கல்முனை றினோன் விளையாட்டு கழகத்தினருக்கும் இடையிலான சிநேகபூர்வ கிரிக்கெட் போட்டியும் ஸஹிரியன் விளையாட்டு கழகத்தின் இளையோர் அணியின் சீருடை அறிமுக நிகழ்வும் கடந்த வெள்ளிக்கிழமை சாய்ந்தமருது வொலிவேரியன் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டி நிகழ்வுக்கு ஷரீப் பவுண்டேஷன் தவிசாளர் தொழிலதிபருமான கலாநிதி ஷரீப் ஹக்கீம் பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன் இதில் சிலோன் மீடியா போரத்தின் தலைவரும், மெட்ரோ லீடர் பத்திரிகையில் பணிப்பாளருமான கலாநிதி றியாத் ஏ.மஜீத் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இப்போட்டியில் ஸஹிரியன் விளையாட்டு கழகத்தின் இளையோர் அணி வெற்றி பெற்றது.